DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 230/2019**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 12 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு. செந்தாமரைக்கண்ணன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of March 2026.

**(A3, A5, A9 absent. Petition filed and allowed. A7 died. Others Present. )**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது திருநெல்வேலி மாநகர காவல் உதவி ஆணையராக மாநகர குற்றப்பிரிவில் பணிபுரிந்துவருகிறேன். கடந்த 01.03.2016 ம் தேதி ஊத்துமலை காவல் நிலைய ஆய்வாளராக நான் பணியில் இருந்தபோது, ஊத்துமலை காவல் நிலைய குற்ற எண். 54/2016, சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 366, 324, 506(ii) IPC வழக்கில் ஊத்துமலை பெண் சார்பு ஆய்வாளர் திருமதி. சாந்தி என்பவர் பதிவுசெய்த முதல் தகவல் அறிக்கை நகலை நான்

பெற்றுக்கொண்டேன். இவ்வழக்கின் சாட்சிகள் நல்லமலை, பெண் சார்பு ஆய்வாளர் திருமதி. சாந்தி ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். கடந்த 01.03.2016 ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவை 147, 148, 294(b), 366, 324, 506(ii) IPC லிருந்து 147, 148, 364, 294(b), 324, 506(ii) IPC ஆக மாற்றம் செய்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் தென்காசி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அந்த **பிரிவுமாற்றல் அறிக்கை அ.சா.ஆ. 38** ஆகும்.

2) இவ்வழக்கில் கடந்த 05.03.2016 ம் தேதி எதிரி தெய்வ சுந்தரபாண்டியன் என்ற தெய்வத்தை கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் திரு. தர்மராஜ், ஊத்துமலை கிராம நிர்வாக அலுவலர், திருமதி. மகாலெட்சுமி, ஊத்துமலை கிராம உதவியாளர் ஆகிய சாட்சிகளின் முன்பு பதிவுசெய்தேன். அதில் வழக்கின் எதிரிகள் தெய்வசுந்தரபாண்டியன் என்ற தெய்வம், வெள்ளத்துரை, கணபதிதேவர் என்ற கணபதி பாண்டியன், மாரியப்பன் த.பெ. ஸ்ரீரங்கம், கணேசன், வெள்ளத்துரை, த.பெ. சாமித்துரை, சபரிசெல்வம், மாரியப்பன், ஸ்ரீரங்கம், சிவா என்ற சிதம்பரம், விஷ்ணு என புலன் விசாரணையில் தெரியவந்தது. மேலும், எதிரிகள் நல்லமலையையும், ஜெகதீஷ் ஆகிய இருவரையும் கடத்திக்கொண்டுவந்து அரிவாளால் நல்லமலையை வெட்டியும், ஜெகதீஷை அரிவாள்களால் எதிரிகள் கணபதி தேவர், சுரண்டை வெள்ளத்துரை வெட்டியதையும், எதிரி சபரிசெல்வம் கத்தியால் குத்தி கொலை செய்த விவரத்தையும் தெரிவித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் கொலை செய்த மறைவான இடத்தை அடையாளம் காட்டி ஜெகதீஷின் பிரேதத்தை ஆஜர் செய்கிறேன் என தெரிவித்தார். அந்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 39** ஆகும்.

3) இவ்வழக்கில் கடந்த 05.03.2016 ம் தேதி 12.15 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான ஊத்துமலை கிழக்கு பீட் மலை பகுதியில் உள்ள அடிவாரத்தில் டானா சரகத்தில் ரோட்டிலிருந்து சுமார் 50 அடி தூரத்தில் மலைக்குள் வைத்து

சம்பவ இடம் இருந்தது. சம்பவ இட சாட்சிகள் முத்துராஜா, ஆதி ஆகியோர் முன்பு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகசர் அ.சா.ஆ. 40** ஆகும். அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.41** ஆகும். சம்பவ இடத்தில் அத்தாட்சி மூலம் 05.03.2016ம் தேதி 13.15 மணிக்கு ராஜபாண்டி என்ற ஜெகதீஷின் பிரேதத்தை அதே சாட்சிகளின் முன்னிலையில் பிரேதத்தை கைப்பற்றி பிரேத விசாரணை செய்தேன். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.42** ஆகும். அன்றைய தினம் 13.15 மணி முதல் 14.15 மணி வரை அதே இடத்தில் வைத்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை முடித்து பிரேதத்தை தலைமை காவலர் திரு. குத்தாலிங்கம் என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்காக திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவ பேராசிரியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பிவைத்தேன். 05.03.2016 அன்று 16.00 மணிக்கு அத்தாட்சி மூலம் எதிரி தெய்வசுந்தரபாண்டியன் அடையாளம் காட்டி ஆஜர் செய்த தட்டப்பாறையில் கணபதி தேவரின் தோட்டத்தில் TN–59–AH–8679 Fiesta காரை அத்தாட்சி பிறப்பித்து சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றினேன். மேலும் 5.03.2016 அன்று 16.15 மணிக்கு சம்பவ இடத்தில் சம்பவ இட சாட்சிகளின் முன்னிலையில் ரத்தம் பட்ட மண் கொஞ்சம், ரத்தம் படாத மண் கொஞ்சம், ரத்தம் படிந்த புல் ஆகியவற்றை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ. 43** ஆகும். **ரத்தம் பட்ட மண் சா.பொ. 10, ரத்தம் படாத மண் சா.பொ. 11, ரத்தம் படிந்த புல் சா.பொ.12** ஆகும்.

4) வழக்கில் தலைமை காவலர் திரு. குத்தாலிங்கம், கொலையுண்டு இறந்துபோன ஜெகதீஷின் பிரேத பரிசோதனை முடித்து எடுக்கப்பட்ட ரத்தக்கறையுடன் கூடிய வெள்ளை நிற முண்டா பனியன் ஒன்று, வெட்டியெடுக்கப்பட்ட ரத்தக்கறையுடன் கூடிய புளு நிற ஜட்டி ஒன்று ஆகியவற்றை காவல் நிலையத்தில் என்னிடம் ஆஜர் செய்தார். இவ்வழக்கில் 05.03.2016ம் தேதி 17.00 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து சட்டப்பிரிவுகள் 147, 148, 364, 294(b), 324, 506(ii) IPC லிருந்து

147, 148, 120(b), 364, 294(b), 307, 302, 506(ii) IPC ஆக மாற்றம் செய்து தென்காசி குற்றவியல் நடுவர் அவர்களுக்கு அனுப்பினேன். அந்த **பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ. 44** ஆகும். இவ்வழக்கின் எதிரி தெய்வசுந்தரபாண்டியன் என்ற தெய்வத்தை தக்க வழிக்காவலுடன் தென்காசி குற்றவியல் நடுவர் அவர்களுக்கு நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன்.

5) வழக்கின் சாட்சிகள் கருப்பசாமி, வெங்கடசாமி, முத்துராஜா, ஆதி, அம்சமணி, தீபா ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். கடந்த 06.03.2016ம் தேதி 09.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகளான சபரிசெல்வம், மாரியப்பன் ஆகியோரை போலீஸ் பார்ட்டி சகிதம் சுரண்டை வீ.கே.புதூர் ரோட்டில் கலிங்கப்பட்டி பஸ்ஸ்டாப்பில் வைத்து கைது செய்து சாட்சிகள் திரு. தர்மராஜ், கிராம நிர்வாக அலுவலர், திருமதி. மகாலெட்சுமி கிராம உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் விசாரித்தபோது, எதிரிகள் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள். அதில் எதிரி சபரிசெல்வம் தனது வாக்குமூலத்தில் தன்னை அழைத்துசென்றால் ஜெகதீஷை தான் கொலை செய்வதற்கு பயன்படுத்திய கத்தியை மறைத்து வைத்திருக்கும் இடத்திலிருந்து அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்கிறேன் என தெரிவித்தார். **சபரி செல்வம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.45** ஆகும்.

6) எதிரி மாரியப்பனை 10.00 மணிக்கு கைது செய்தபோது அதே சாட்சிகளின் முன்னிலையில் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதில் எதிரி மாரியப்பன் தனது வாக்குமூலத்தில் தன்னை அழைத்துசென்றால் தான் டிரைவராக இருக்கும் TN-72-AK-5017 டவேரா காரை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்கிறேன் என தெரிவித்தார். எதிரி **மாரியப்பன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.46** ஆகும். பின்னர் அத்தாட்சியின் மூலம் 06.03.2016ம் தேதி 11.15 மணிக்கு எதிரி மாரியப்பன் வீட்டருகில் மறைத்து வைத்திருந்த TN-72-AK-5017 டவேரா கார் ஒன்றை அதே சாட்சிகளின் முன்பு அத்தாட்சி மூலம்

கைப்பற்றினேன். மேலும் 06.03.2016ம் தேதி 12.00 மணிக்கு எதிரி சபரிசெல்வம் மறைத்து வைத்திருந்த கத்தியை அதே சாட்சிகளின் முன்பு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். எதிரிகள் மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரிகள் சபரிசெல்வம் மற்றும் மாரியப்பன் ஆகியோரை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி அவர்களுக்கு தக்க வழிக்காவல் மூலம் அனுப்பிவைத்தேன். பின்னர் இவ்வழக்கு சொத்துக்களை படிவம் – 91 மூலம் நீதிமன்றம் அனுப்பினேன். அந்த **படிவம் – 91 (5 எண்ணம் ) அ.சா.ஆ. 47 வரிசை** ஆகும்.

7) இவ்வழக்கின் எதிரி கணபதி பாண்டியன் என்ற கணபதி தேவரை கடந்த 09.03.2016ம் தேதி 12.10 மணிக்கு போலீஸ் பார்ட்டி சகிதம் வீ.ரெட்டியார்பட்டி பஸ் ஸ்டாப்பிற்கு சென்றபோது பஸ் ஸ்டாப்பில் நின்றுகொண்டிருந்தவரை கைது செய்து சாட்சிகள் கிராம நிர்வாக அலுவலர் திரு. தர்மராஜ் மற்றும் கிராம உதவியாளர் திருமதி. மகாலெட்சுமி ஆகியோர் முன்னிலையில் விசாரிக்க எதிரி கணபதிதேவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் தான் அரிவாளால் நல்லமலையை வெட்டியதையும், ஜெகதீஷை அரிவாளால் வெட்டி கொன்றதையும் சொல்லி மேலும் தான் சம்பவத்தின்போது வைத்திருந்த லைட்டுடன் கூடிய 90038 91031 என்ற எண் கொண்ட ஏர்டெல் சிம்கார்டுடன் கூடிய கருப்பு கலர் நோக்கியா செல்போனையும், தனது சட்டை பையிலிருந்து எடுத்து ஆஜர் செய்கிறேன் என்றும் மேலும் தன்னை அழைத்து சென்றால் சம்பவத்தின்போது தான் நல்லமலையை வெட்டிய அரிவாளையும், ஜெகதீஷை வெட்டிக்கொன்ற அதே அரிவாளையும் எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று தெரிவித்தார். எதிரி **கணபதி தேவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 48** ஆகும். பின்னர் 09.03.2016 அன்று 13.10 மணிக்கு அத்தாட்சியின் மூலம் அதே சாட்சிகளின் முன்னிலையில் வீ. ரெட்டியார் பட்டி பஸ் ஸ்டாப்பில் வைத்து எதிரி கணபதி பாண்டியனின் சட்டைப்பையிலிருந்து எடுத்து ஆஜர் செய்த

90038 91031 என்ற எண் கொண்ட ஏர்டெல் சிம்கார்டுடன் கூடிய கருப்பு கலர் நோக்கியா செல்போனை கைப்பற்றினேன். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ. 49** ஆகும்.

8) கடந்த 09.03.2016ம் தேதி 14.00 மணிக்கு அதே சாட்சிகளின் முன்பு அத்தாட்சி மூலம் ஊத்துமலை – ஆஞ்சநேயர் கோவிலுக்கு செல்லும் வழியில் சம்பவ இடத்திற்கு முன்னால் உள்ள ரோட்டில் பாலத்திற்கு கீழ் மறைத்து வைத்திருந்த அரிவாளை எதிரி கணபதி பாண்டியன் முன்பாக கைப்பற்றினேன். 09.03.2016ம் தேதி எதிரி கணபதி பாண்டியன் என்ற கணபதி தேவரை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் தென்காசி அவர்களிடம் தக்க வழிக்காவல் மூலம் அனுப்பி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

9) 11.03.2016ம் தேதி வழக்கின் எதிரி மாரியப்பன் என்பவரை போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். கனம் நீதிமன்ற உத்தரவு பெற்று 11.03.2016 அன்று மாலை 05.45 மணிக்கு போலீஸ் காவலில் எடுத்து நிலையம் அழைத்து வந்து ஓய்வு கொடுத்து மறுநாள் 12.03.2016ம் தேதி காலை 06.00 மணிக்கு சாட்சிகள் தர்மராஜ், திருமதி. மகாலெட்சுமி ஆகியோர் முன்பு எதிரி மாரியப்பன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். அதில் அவர் தன்னை அழைத்து சென்றால் சம்பவத்தின்போது நல்லமலை, வெள்ளத்துரையை சுட்ட கைத்துப்பாக்கியையும், TN–01–V–7975 என்ற எண் கொண்ட இண்டிகோ எல்.எஸ் காரையும் ஆஜர் செய்கிறேன் என தெரிவித்தார். அதை 12.03.2016ம் தேதி 08.30 மணிக்கு அதே சாட்சிகளின் முன்பு அத்தாட்சி மூலம் திருநெல்வேலி டவுணில் உள்ள எதிரி மாரியப்பன் வீட்டிற்கு அருகில் நின்றுகொண்டிருந்த TN–01–V–7975 என்ற எண் கொண்ட இண்டிகோ எல்.எஸ் காரை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். எதிரி **மாரியப்பன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 50** ஆகும். எதிரி மாரியப்பனை 12.03.2026 அன்று கனம் குற்றவியல் நடுவர், தென்காசி அவர்கள் முன்பாக விசாரணை முடித்து ஆஜர் செய்தேன்.

10) 14.03.2016ம் தேதி 09.15 மணிக்கு வழக்கின் எதிரி விஷ்ணு என்பவரை ஜங்ஷன் பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டிருந்தவரை போலீஸ்

பார்ட்டி சகிதம் கைது செய்து சாட்சிகள் தர்மராஜ் வி.ஏ.ஓ. திருமதி. மகாலெட்சுமி ஆகியோர் முன்பு கைது செய்துவிசாரித்தபோது, எதிரி விஷ்ணு தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் தான் சம்பவத்தின்போது வைத்திருந்த கருப்பு கலர் நோக்கியா லைட்டுடன் கூடிய செல்போன் ஒன்றை ஆஜர் செய்கிறேன் என்று கூறினார். **எதிரி விஷ்ணு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 51** ஆகும். 14.03.2016 ம் தேதி 10.30 மணிக்கு அத்தாட்சி மூலம் அதே சாட்சிகளின் முன்பு திருநெல்வேலி ஜங்ஷன் பஸ் ஸ்டாண்டில் வைத்து எதிரி விஷ்ணுவின் சட்டைப்பையிலிருந்து எடுத்து ஆஜர் செய்த கருப்பு கலர் நோக்கியா லைட்டுடன் கூடிய செல்போனுடன் 81908 55301 எண் கொண்ட சிம் கார்டு ஒன்றையும் அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். எதிரி விஷ்ணுவை 14.03.2016 அன்று கனம் குற்றவியல் நடுவர் தென்காசி அவர்களுக்கு தக்க வழிக்காவல் மூலம் அனுப்பி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

11) 14.03.2016 அன்று வழக்கின் எதிரி கணேசன் கனம் நீதிமன்றத்தில் சரண்டர் ஆனார். 15.03.2016 அன்று எதிரி ஸ்ரீரங்கம், எதிரி சிவா என்ற சிதம்பரம் கனம் நீதிமன்றத்தில் சரண்டர் ஆனார்கள். 18.03.2016 ம் தேதி வழக்கின் எதிரி வெள்ளத்துரையை போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க கனம் நீதிமன்றத்தில் வேண்டுகோள் விண்ணப்பம் கொடுத்து உத்தரவு பெற்று, 18.03.2016 அன்று 20.00 மணிக்கு காவல் நிலையம் கொண்டுவந்து எதிரிக்கு ஓய்வுகொடுத்து பின்பு 19.03.2016 அன்று 09.00 மணிக்கு சாட்சிகள் தர்மராஜ், மகாலெட்சுமி ஆகியோர் முன்பு விசாரிக்க எதிரி வெள்ளத்துரை தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதில் தன்னை அழைத்து சென்றால் சம்பவத்தின்போது தான் ஜெகதீஷை கொலை செய்ய பயன்படுத்திய அரிவாளை எடுத்து ஆஜர் செய்கிறேன் என தெரிவித்தார். அதை அத்தாட்சி மூலம் 19.03.2016 ம் தேதி 10.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரியான கணபதி தேவரின் தோட்டத்திற்கு அருகில் ஒரு புதர் செடியின் மறைவிலிருந்து எதிரி வெள்ளத்துரை அடையாளம் காட்டி ஆஜர் செய்த அரிவாளை அதே சாட்சிகளின்

முன்பாக அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். **எதிரி வெள்ளத்துரை கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 52** ஆகும். விசாரணை முடித்து வெள்ளத்துரையை மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

12) பின்னர் 28.03.2016 ம் தேதி வழக்கின் எதிரி வெள்ளத்துரை, த.பெ.மாடசாமி என்பவர் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கின் சாட்சிகள் தர்மராஜ், மகாலெட்சுமி ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். கடந்த 04.04.2016 ம் தேதி வழக்கின் சாட்சி சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். 06.04.2016 ம் தேதி வழக்கின் சொத்துக்களை பகுப்பாய்விற்கு அனுப்ப வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட மண்டையோடு மற்றும் திசுக்களை டி.என்.ஏ பரிசோதனைக்கு அனுப்பினேன். மேலும் கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு சொத்துக்களை பகுப்பாய்விற்கு அனுப்ப வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். இவ்வழக்கில் 05.05.2016 ம் தேதி சாட்சிகள் அறிவியல் அறிஞர் திருமதி. கலாலெட்சுமி, மருத்துவர் செல்வ முருகன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். கடந்த 20.05.2016 ம் தேதி சாட்சி அறிவியல் அறிஞர் திரு. பாலமுருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். மருத்துவர் திரு. அன்பு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். கடந்த 25.05.2016 அன்று தலைமை காவலர் திரு. குத்தாலிங்கம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட **மரபணு பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 53** ஆகும். வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட **ரசாயன பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 54** ஆகும். வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்ட **உயிரியல் வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.55** ஆகும். பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட மண்டையோட்டை பரிசோதனை செய்ய வழங்கப்பட்ட **Super imposition வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ. 56** ஆகும். பின்னிட்டு இவ்வழக்கு

சொத்துக்களை படிவம் –91 மூலம் நீதிமன்றம் அனுப்பிவைத்தேன். அந்த **படிவம் – 91 (5 எண்ணம்) அ.சா.ஆ. 57 வரிசை** ஆகும்.

13) இந்நிலையில் நான் பணியிடமாறுதல் பெற்று வேறு காவல் நிலையம் சென்ற காரணத்தினால் வழக்கு கோப்புகளை எனக்கு பின்னர் ஊத்துமலை காவல் ஆய்வாளராக பொறுப்பேற்றுகொண்ட திரு. குமரேசன் அவர்கள் வசம் ஒப்படைத்தேன். அவருடைய கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சையமானதாகும். முதலமைச்சர் பாதுகாப்பு பணிக்காக அவர் சென்றுவிட்ட காரணத்தினால் அவரால் இன்று நீதிமன்றம் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலவில்லை.

14) வழக்கு கோப்புகளை பார்வையிட்ட காவல் ஆய்வாளர் திரு. குமரேசன் இவ்வழக்கின் சாட்சிகளை மீண்டும் விசாரிக்க அவர்கள் முன்னர் கூறியதை போலவே அவரிடமும் கூறியதால் அவர் தனியே வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை. இத்துடன் தனது விசாரணையை முடித்துக்கொண்ட காவல் ஆய்வாளர் திரு. குமரேசன் இவ்வழக்கின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக எதிரிகளின் மீதான குற்றம் உறுதியான காரணத்தினால் இவ்வழக்கின் எதிரிகள் மீது 147, 148, 120(b), 364, 342, 294(b), 307, 302, 506(ii) IPC r/w 149 IPC படி நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் இவ்வழக்கின் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் வாக்குமூலம் பதிவுசெய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், சாட்சிகளின் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை என்றும், நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும், எந்தவொரு எதிரியும் தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் எந்தவொரு சான்றுபொருளும் அத்தாட்சி பிறப்பிக்கப்பட்டு கைப்பற்றப்படவில்லை என்றும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல்

இவ்வழக்கின் ஆவணங்களை பின்னிட்டு காவல் நிலையத்தில் உற்பத்தி செய்து ஒருதலைப்பட்சமாக விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் திரு. குமரேசன் எந்தவொரு சாட்சியையும் இவ்வழக்கில் விசாரிக்கவில்லை என்றும், வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் இயந்திரத்தனமாக தவறான ஒரு குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரிகளுக்கும், வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன நபர் ஜெகதீஷ் தானா என்பதை உறுதி செய்ய டி.என்.ஏ பரிசோதனைக்கு அனுப்பினேன். இறந்துபோன நபர் யார் என்பது கண்டறியப்படாத காரணத்தினால்தான் டி.என்.ஏ பரிசோதனைக்கும் Super imposition பரிசோதனைக்கும் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அந்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi